மேல்பாப்பம்பாடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு. S. சக்தி

க. எண்.320/2022 நாள்: 05/07/2024

பொருள் மனைப்பிரிவு செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மேல்பாப்பம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்கள் : 56/5, 56/6, 56/7A, 57/8B ஆகியவற்றில் ஏக்கர் 1.875 செண்டு (அ) 7578.00 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட **மீனாட்சி நகர்** மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் சார்பு.

படிக்க:

1. அரசாணை எண்.57, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD (3) துறை நாள் : 26.03.2024
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மண்டலம் அவர்களின் ROC No.KJKMN91F/2024/TCP நாள்: 27.02.2024
3. மேல்பாப்பம்பாடி ஊராட்சி தீர்மான எண் 67 , நாள்: 05/07/2024
4. தானப்பத்திரம் எண்.455/2024 நாள் 12.03.2024
5. State Bank of India விழுப்புரம், கருவூல் செலுத்துச் சீட்டு நாள் 25.03.2024

உத்திரவு:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மேல்பாப்பம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்கள். 56/5, 56/6, 56/7A, 57/8B ஆகியவற்றில் ஏக்கர் 1.875 செண்டு(அ) 7578.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாகத் தெரிவித்து வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. (1)ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (2)–ல் காணும் நகர் ஊரமைப்பு, உதவி இயக்குனர் விழுப்புரம் மண்டலம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (3)ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்து மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்கான கட்டணம் ரூ.11,254.01 மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.1000 கருவூலம் தலைப்பில் இணையதளத்தின் வாயிலாக செலுத்தி அதற்கான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு தலைப்பு : XJKMN91F/2024/TCP

வ. எண்	விஸ்தீரணம்	சார்பதிவளார் சந்தை மொத்த மதிப்பு	3% நில மாற்று கட்டணம் ரூபாய்.
1.	ஏக்கர் 1.875 செண்டு (எ) 7578.00 சதுர மீட்டர்.	48.28	ரூ.11,254.01

நிபந்தனைகள்:

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எந்த முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுகிறது என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெற வேண்டும். மேலும் நீர் நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எந்தவித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினரால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4. மேற்படி **மீனாட்சி** நகர்என்ற மனைப்பிரிவில் தார் சாலை,தெருக்களின் பெயர் பலகைகள் ஆகியன அமைக்கப்பட்டு தானமாக செஞ்சி சார்பதிவாளர் ஆவண எண் **455/2024** **12.03.2024** நாள்.... ன் படி சத்திய மங்களம் ஊராட்சிக்குஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மனையின் உயர்மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் சரிசெய்து தர வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மேல்பாப்பம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்கள். 56/5, 56/6, 56/7A, 57/8B ஆகியவற்றில் ஏக்கர் 1.875செண்டு(அ) 7578.00 சதுரமீட்டர் பரப்பளவு அமைந்துள்ள 43 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
மேல்பாப்பம்பட்டி ஊராட்சி,
செஞ்சி ஊராட்சி ஒன்றியம்